மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு மார்ச் திங்கள் 06ம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்.04/2021
உள்
அசல் வழக்கு எண்.56/2007
-------------

காதர்ஜான் பீவி ... மனுதாரர்/3ம் பிரதிவாதி

/எதிர்/

எம்.மெகபூப் ஜான் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 22.12.2021ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 22.02.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வெ.விநாயகமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.இப்ராகிம் பாபு அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 13 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுதாரர்/ 3ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தால் நேரில் ஆஜராக இயலாமல் போன தவறுதலை மன்னித்து 29.06.2015ம் தேதி நீதிமன்றத்தில் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கரவு செய்து வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிட வேண்டி 18.02.2019ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

எதிர்மனுதாரர்/வாதி பிராது "சி" தபசில் சொத்தான கிழமேல் பாதையில் உரிமையுள்ளதாக பரிகாரம் கோரியும், வேறு பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல செய்துள்ளதில் மனுதாரரையும் தரப்பினராக சேர்த்து நீதிமன்றத்தின் மூலம் சம்மன் அனுப்பியதை மனுதாரர் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் வாய்தா தேதியன்று நேரில் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரை அழைத்தும் அஜரில்லை என்பதால் மனுதாரரை தோன்றா தரப்பினராக அறிவித்து மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியன்று மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் எழுந்து நடமாட முடியாத நிலையில் இருந்ததால் மேற்படி வாய்தா தேதியன்று மனுதாரர் நேரில் ஆஜராக இயலாமலும் வழக்கறிஞர் நியமனம் செய்ய முடியாமலும் போய்விட்டது. மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும். அதன்பின் தற்போது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தின் மூலம் இ.பி.எண்.16/2018 உள் அ.வ.எண்.56/2007 மனுவில் 25.01.2019ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி சம்மன் மனுதாரருக்கு சார்பு செய்த பின்பு தான் மேற்படி அசல் வழக்கில் தீர்ப்பாகி உள்ள விபரம் தெரிய வந்துள்ளது. அதனால் பிராது "சி" தபசில் சொத்தின் உரிமையை நிலை நாட்ட மனுதாரர் பக்கம் நல்ல கட்சி உள்ளது. மேற்படி அசல் வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போன தவறுதலை மன்னித்து நீதிமன்றத்தில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவாக வேண்டியது அவசியமானதாகும். இல்லாதுபோனால் மனுதாரருக்கு அனேக இன்னலும், இழப்பும் ஏற்படக்கூடும் என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**3). எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. அதனால் மனுதாரரின் மனு எடுத்த எடுப்பிலேயே

தள்ளுபடி செய்யப்பட வேண்டும். எதிர்மனுதாரர் தெளிவாய் ஒப்புக் கொண்ட சங்கதிகளை தவிர மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் எதிர்மனுதாரரால் ஆட்சேபிக்கப்படுகின்றன. மேற்படி வழக்கில் மனுதாரர் அவரது உடன்பிறந்த சகோதரி சகோதரரான உறீராஜான் மற்றும் பரீத் மஉறபூப் ஜான் ஆகியோர் 2, 4 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி வழக்கில் தாவா பொது சந்து "சி" ஷெட்டியூலாக காட்டப்பட்டு அதனை தொடர்ந்து அப்போது சந்து வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு மட்டும் பொதுவாக பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்ய 2வது பரிகாரமாக கோரப்பட்டுள்ளது. அதன்படி தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. அதனால் மனுவில் 2 மற்றும் 4 பிரதிவாதிகள் அவசிய தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும். மேலும் 2ம் பி ரதிவாதி உறீராஜான் 21.06.2017ம் தேதியிலும், 4ம் பிரதிவாதி பரீத் மஉறபூப் ஜான் 12.07.2015ம் தேதியிலும் இறந்துவிட்டதால் அவர்களது வாரிசுகள் மனுவில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படாவிடில் அதன் காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். 14.10.1960ம் தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தாத்தா ஷேக் பரீத் ஒரு தரப்பினராகவும் அதிலர் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை ஷேக் சிக்கந்தர் சாட்சி கையொப்பமிட்டுள்ளார். அதன்படி பாகபத்திரத்தில் பிராது "சி" ஷெட்டியூல் சொத்து பொது சந்து என்று தெற்குமால் காட்டிதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் 2 முதல் 4 பிரதிவாதிகளின் முன்னோர்கள் தாவா பொது சந்து என்று ஒப்புக்கொண்டதை தற்போது மனுதாரர் மறுப்பதிலிருந்து தடை செய்யப்படுகிறார். அதனால் தாவா பொது சந்தில் எதிர்மனுதாரருக்கு உரிமையில்லையென மனுதாரர் கூற அருகதையில்லை. உடல்நலமில்லை என்பதற்கான குறிப்பான காரணம் மனுவில் தெரிவிக்கப்படவில்லை. எவ்வளவு காலம் உடல் நலமின்றி இருந்தார். எப்போது நலம் பெற்றார். அதன்பின் வழக்கினை தொடர ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்கான காரணம் ஏதும் மனுவில் குறிப்பிடவில்லை. மேற்படி வழக்கு 29.06.2015ம் தேதியில் தீர்ப்பானது அதன்பின் 2018ம் ஆண்டு கடந்த நிறைவேறுதல் மனு எண்.16/2018 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இடைப்பட்ட

காலம் வரை மனுதாரர் நடவடிக்கை எடுக்காததற்கான காரணம் மனுவில் குறிப்பிடப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**<u>7). தீர்வு:-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் மனுதாரர்/3ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தால் நேரில் ஆஜராக இயலாமல் போன தவறுதலை மன்னித்து 29.06.2015ம் தேதி நீதிமன்றத்தில் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கரவு செய்து வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிட வேண்டி 18.02.2019ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக் கூடும். இந்த வழக்கில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.03/2021 மனு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால்

அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, இ.ம.எண்.03/2021 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மனுதாரரால் மனுதாரர்/3ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தால் நேரில் ஆஜராக இயலாமல் போன தவறுதலை மன்னித்து 29.06.2015ம் தேதி நீதிமன்றத்தில் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நீக்கரவு செய்து வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிட வேண்டி 18.02.2019ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு மார்ச் திங்கள் 06ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/3ம் பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.